**பெருநகர சென்னை மாநகராட்சி**
**தேர்தல் செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண்.45** **நாள் : 14.04.2024**

**நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத்தேர்தல் 2024னை முன்னிட்டு, இராணி மேரி கல்லூரி வாக்கு எண்ணும் மையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாட்டுப் பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

நடைபெறவுள்ள நாடாளுமன்ற பொதுத்தேர்தல், 2024னை முன்னிட்டு, இராணி மேரி கல்லூரியில் வடசென்னை நாடாளுமன்றத் தொகுதிக்கான வாக்குகள் எண்ணும் மையத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாட்டுப் பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர்/கூடுதல் தலைமைச் செயலாளர்/ ஆணையாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் இன்று (14.04.2024) பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து, தேர்தல் நடத்தும் அலுவலர் (சென்னை வடக்கு) மற்றும் தேர்தல் நடத்தும் அலுவலர் (சென்னை மத்தியம்) அலுவலகங்களில் நடைபெற்ற காவல் அலுவலர்கள் மற்றும் ஆளிநர்களுக்கான நீட்டிக்கப்பட்ட தபால் வாக்குப்பதிவினையும், அங்குள்ள தபால் வாக்குப்பதிவு மையத்தினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

முன்னதாக பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாக கூட்டரங்கில், வருகின்ற பாராளுமன்றத் தேர்தலை முன்னிட்டு, சென்னை மாவட்டத்தில் உள்ள குடும்பத்தினரிடையே தேர்தலில் 100% வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வினை ஏற்படுத்தும் வகையில் நடைபெற்ற தேர்தல் குறித்த வினாடி வினா போட்டி நிகழ்ச்சியினை மாவட்ட தேர்தல் அலுவலர்/ கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் ஆணையாளர் அவர்கள் தொடங்கி வைத்து, தேர்தல் குறித்த கேள்விகளுக்கு சரியாகப் பதிலளித்தவர்களுக்கு பரிசினை வழங்கினார்.

இந்த நிகழ்வுகளின்போது தேர்தல் நடத்தும் அலுவலர் (சென்னை மத்தியம்) திரு. கே.ஜெ. பிரவீன் குமார், இ.ஆ.ப., , மாவட்ட வருவாய் அலுவலர் (தேர்தல்) திரு. சுரேஷ், மண்டல அலுவலர் திரு.முருகதாஸ் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு :இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**